அசல் வழக்கு எண். 18/2017 தேதி 08-02-2024

வா.சா.1- கிருஷ்ணகுமாரி

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நானும், நல்லம்மாவும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். நல்லம்மாள் என் மச்சான் மனைவி. ராமசாமி மற்றும் பெருமாள் ஆகியோருக்கு எதிராக வழக்க தாக்கல் செய்துள்ளோம். நான் வாங்கிய நிலத்தில் தகராறு வழக்கு தாக்கல் செய்தேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். சர்வே எண்.800 மற்றும் 820 ஆகியவற்றிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்துக்கள் எங்களுக்கு வரவேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.800 ல் மொத்தம் எவ்வளவு நிலம் உள்ளது என்று தெரியவில்லை. வழக்கு சொத்துக்கள் என் மாமனார் அக்குள் ரெட்டியார் கிரையம் பெற்ற மற்றும் பூர்விக சொத்துக்களாகும். தற்போது எனக்கு 45 வயது ஆகிறது. பெத்து ரெட்டியார் எனக்கு தெரியாது.

2. பெத்து ரெட்டியாருக்கு வீரபத்திர ரெட்டியார், வீரம்மா ரெட்டியார்., அக்குள் ரெட்டியார், பெருமாள் ரெட்டியார் ஆகிய மகன்களும், இரண்டு பெண் மகள்களும் வாரிசுகள். பெண் மகள்கள் பெயர் தெரியாது. பெத்து ரெட்டியார் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. பெத்து ரெட்டியார் வாரிசுகள் சொத்துக்களை வாய்க்காரராக சுமார் 40 வருடங்களுக்கு முன்பு பிரித்து கொண்டனர். மேற்படி விவரத்தை எனது மாமனார் 25 வருடங்களுக்கு முன்னர் என்னிடம் கூறினார். பாகப்பிரிவினைக்கு பின்னர் சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வருகின்றர். ஒவ்வொருக்கும் தலா ஏக்கர் 2.90 செண்ட் பிரித்து கொண்டனர். மேற்படி ஏக்கர் 2.90 செண்ட் வீதம் தனித்தனியாக பட்டா ஏற்பட்டது. அவ்வாறு தனித்தனியாக பட்டா ஏற்பட்ட சொத்துக்களில் எனக்கும், எனக்கு கிரையம் கொடுத்த வீரம்மா ரெட்டியாரக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

(பிராதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**